09-03-2013 Dinamalar

மெட்ரோ ரயில்

# ஒரே நாளில் 54 மீ., சுரங்க பாதை அமைத்து சாதனை

சென்னை, மார்ச் 9-

மெட்ரோ ரயில் திட்டத்தில், நான்கு நிலையங்களிலிருந்து அமைக்கப்படும் சுரங்க பாதை பணியில், இதுவரை, 2,330 மீ., துாரம் பாதை அமைக்கப்பட்டுள்ளது. வண்ணாரப்பேட்டை ரயில் நிலையத்தில் மட்டும் ஒரே நாளில், 54.6 மீ., சுரங்க பாதை அமைத்து சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில், 45 கி.மீ., துாரம் ரயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

இதில், 24 கி.மீ., சுரங்க பாதையாக அமைகிறது. வண்ணாரப்பேட்டை, நேரு பூங்கா, மே தின பூங்கா மற்றும் ஷெனாய் நகர் மெட்ரோ ரயில் நிலையங்களிலிருந்து, சுரங்க பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

வண்ணாரப்பேட்டையில் மட்டும், ஒரே நாளில், 54 மீ., துாரத்திற்கு சுரங்க பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மெட்ரோ ரயில் திட்ட அதிகாரி கூறியதாவது:

நான்கு நிலையங்களிலும், சுரங்க பாதை அமைக்கும் பணி, 11.47 சதவீதம் முடிந்துள்ளது. பொதுவாக, சுரங்க பாதை அமைக்கும் இயந்திரம் மூலம், தினமும், 10 லிருந்து, 15 மீ., துாரம் வரை தான் பாதை அமைக்க முடியும்.

ஆனால், வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில், முதல் தடத்தில், ஒரே நாளில், 1.4 மீ., அகலம் கொண்ட, 39 கான்கிரீட் வளைய வார்ப்புகள் இணைக்கப்பட்டு, மொத்தம், 54.6 மீ., துாரம் பாதை அமைத்து சாதனை நிகழ்த்தப்பட்டு உள்ளது.

வண்ணாரப்பேட்டை, சைதாப்பேட்டை, நேரு பூங்கா, கீழ்ப்பாக்கம், பச்சையப்பா கல்லுாரி, அண்ணா நகர் டவர் மற்றும் திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலையங்களில், மேல்தளம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. ஷெனாய் நகர் நிலையத்தில், மேல் தள பணி முடிந்துள்ளது.

இவ்வாறு, அவர் தெரிவித்தார்.